விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 147 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 01 வியாழக்கிழமை (15.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## மக்கள் ஆணைக்கு எதிராகச் செயற்பட முடியாது

### எதிர்க்கட்சியினரை பகிரங்கமாக எச்சரித்த ஜனாதிபதி அநுர



(கொழும்பு).

உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராகச் செயற்படும்

15ஆம் பக்கம் பார்க்க

## தமிழினப் படுகொலையின் வலி சுமந்த ஊர்திப் பவனி

### நல்லூரிலிருந்து நேற்று ஆரம்பம்







06ஆம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்கால் வாரத்தை முன்னிட்டு

# தமிழர் தாயகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் முள்ளி வாய்க்கால் வாரத்தை முன்னிட்டு நேற்று நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. நினைவேந்தல் கஞ்சியும் பரிமாறப் பட்டது. *(16ஆம் பக்கம் பார்க்க)*





## நுவரெலியாவில் பஸ் விபத்து

### 19 பேர் காயம்

(நுவரெலியா)

நுவரெலியா இறம்பொட, கெரண்டியெல்ல பேருந்து விபத்து நடந்த இடத்திற்கு அருகிலுள்ள ஒத்த கடே கடைக்கு அருகாமையில் நேற்று புதன்கிழமை மாலை

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் விபத்து

### இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.செம்மணிச் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளும் பட்டா ரக வாகனமும் மோதியதில் இவ் விபத்து சம்பவித்

15ஆம் பக்கம் பார்க்க

## இனப் படுகொலை நினைவுச் சின்னம்

### கனேடியத் தூதுவரை அழைத்து கண்டனம் தெரிவித்த விஜித ஹேரத்



(கொழும்பு)

ஒன்டாறியோவின் பிரம்டனில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் இனப் படுகொலை நினைவுச்சின்னத்தைக் கனடா அங்கீகரித்து திறப்பு விழா நடத்தியதற்கு, உத்தியோக பூர்வமாக ஆட்சேபனை தெரிவிக்க, இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் நேற்று புதன்கிழமை கனேடிய உயர் ஸ்தானிகரை அழைத்தார்.

15ஆம் பக்கம் பார்க்க

## உரும்பிராயில் புற்றுநோயின் வேதனை தாங்க முடியாமல்

### விபரீத முடிவெடுத்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் புற்றுநோயின் வேதனை தாங்கமுடியாமல் விபரீத முடிவெடுத்த ஒருவர் மரணமடைந்துள்ளார்.

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த கனகரத்தினம் லோகநாதன் (வயது-72) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த மூன்று ஆண்டுகளாக புற்றுநோயால் அவஸ்தைப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நோயின் வீரியம் தாங்க முடியாமல் நேற்று முன்தினம் காலை

15ஆம் பக்கம் பார்க்க

## நினைவாயுதம் கண்காட்சி

### யாழ்.பல்கலையில் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

"நினைவாயுதம்" என்கிற தொனிப்பொருளில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் நினைவுகள் கண்காட்சி தமிழினப் படுகொலை வர

16ஆம் பக்கம் பார்க்க

## கொலைக் கலாசாரத்தை ஒழிக்க அநுர அரசு திணறுவது ஏன்? - சஜித் கேள்வி

கொழும்பு)

இரண்டு மாதங்களில் பாதாள உலகத்தை அழிப்பதாகக் கூறிய அரசாங்கத்தால், இன்று இந்தக் கொலைக் கலாசாரத்தை ஒழிக்க முடியாது போயுள்ளது ஏன் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

16ஆம் பக்கம் பார்க்க

## காஸா மீது இஸ்ரேல் தாக்குதல்

### 22 குழந்தைகள் உட்பட 60 பேர் உயிரிழப்பு

(காஸா)

காஸா மீதான இஸ்ரேலின் தொடர் வான்வழித் தாக்குதல்களில் 22 குழந்தைகள் உள்பட 60 பேர் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஸாவின் பல்வேறு பகுதிகளின் மீது இஸ்ரேல் இராணுவம் நேற்று அதிகாலை நடத்திய தொடர் வான்வழித் தாக்குதல்களில் 60 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக

16ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

# முள்ளிவாய்க்கால் தூபி முன் மாணவர்கள் அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் யாழ். பல்கலை வளாகத்தினுள் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி முன்பாக மாணவர்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

நினைவுத் தூபி முன்பாக ஒன்றுகூடிய மாணவர்கள், முள்ளிவாய்க்கால் மண்ணில் படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்ததுடன், அவர்களுக்கு அகவணக்கம் செலுத்தி, மலர் தூபி அஞ்சலி செலுத்தினர். (ம-4,33)

## முள்ளிவாய்க்கால் வாரத்தை முன்னிட்டு

# யாழ். பல்கலைக்கழகத்தில் இரத்ததான முகாம்



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகத்தின் ஒருங்கிணைப்பில் "குருதியால் தோய்ந்த நம் தேசத்திற்காய் ஒரு துளி குருதி" எனும் கருப்பொருளில் மாபெரும் இரத்ததான முகாம் ஒன்று நேற்று புதன்கிழமை (14) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், அதனை நினைவுகூரும் முகமாக இந்த இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு குருதிக்கொடையில் ஈடுபட்டனர். தமிழ், சிங்கள, முஸ்லீம் மாணவர்கள் என அனைவரும் இனம், மதம், மொழி பேதங்களைக் கடந்து இந்த இரத்ததான முகாமில் ஈடுபட்டனர். (ம-4,33)

## நுவரெலியா நானு ஓயாவில்

# எண்ணெய்த் தாங்கி ஊர்தி விபத்து



(நுவரெலியா)

நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் நானுஓயா - கிளாரண்டன் பகுதியில் பயணித்த எண்ணெய் தாங்கி ஊர்தி ஒன்று நேற்று மாலை குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

கொழும்பிலிருந்து ஹட்டன் வழியாக வெளிமடை நோக்கிப் பயணிக்கும் போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த எண்ணெய் தாங்கி ஊர்தியில் 33 ஆயிரம் லீற்றர் டீசல் மற்றும் பெற்றோல் வெவ்வேறாகப் பிரித்து இருந்ததாகவும் பெருமளவிலான எரிபொருள் இந்த விபத்தில் வெளியேறி அந்தப் பகுதியில் பரவியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

எண்ணெய்த் தாங்கி ஊர்தி குடை சாய்ந்ததையடுத்து வழிந்தோடிய பெற்றோல், டீசலை பெருந்திரளான பொதுமக்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருந்து சேகரித்துக் கொண்டனர்.

குறித்த விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4)

## பாப்பரசரை சந்தித்தார்

# கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித்



(வத்திக்கான்)

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், புதிய போப்பாண்டவரான திருத்தந்தை பதினான்காம் லியோவை நேற்று சந்தித்தார்.

இதன்போது கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால்ரஞ்சித் மற்றும் புதிய போப் அவர்களும் சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (ம-4)

# கொழும்பில் விபத்தில் 51 வயது பெண் பலி

கொழும்பு, பிலியந்தலையில் ஆடைத் தொழிலாளி ஒருவர் கார் மோதியதில் உயிரிழந்துள்ளார்.

விபத்துக்கு காரணமான காரின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர் பிலியந்தலை, தம்பே பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விபத்தில் இறந்த பெண், வேலை முடிந்து வீதியின் வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக கடக்கும் போது, வேகமாக வந்த கார் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-4)

## மரண அறிவித்தல்

# நாகரட்ணம் கந்தசாமி

### ('சாமியார்', உரிமையாளர் - ஞானதேவன் கராஜ்)



பிறப்பு 09.11.1930 இறப்பு 11.05.2025

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிறாம்பியடி வீதியை பிறப்பிடமாகவும் மணிக்கூட்டு வீதி பெருமாள் கோவிலடியை நிரந்தர வசிப்பிடமாகவும், அம்மன் வீதி, கந்தர்மடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் கந்தசாமி அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (11.05.2025) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரட்ணம் - கண்மணி தம்பதியரின் இரண்டாவது புத்திரனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளியம்மை தம்பதியரின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற ஞானேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் வாமதேவன் (ஓய்வுபெற்ற தொழிநுட்பவியலாளர் கொழும்பு), இந்திரதேவன் (இத்தாலி), ஜெயதேவன் (சுவிஸ்), ஜெயந்தி, ரசந்தி (ஜேர்மனி), ஞானதேவன் (ஜேர்மனி), நித்தியானந்தம் (பிரான்ஸ்), சாமினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திராதேவி (கொழும்பு), ஜொனிற்றா (இத்தாலி), இராசமணி (சுவிஸ்), காலஞ்சென்ற இராஜேஸ்வரன் மற்றும் கலாமோகன் (ஜேர்மனி), தேவமனோகரி (ஜேர்மனி), தயாநிதி (பிரான்ஸ்), கோணேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜனனி (செயற்திட்ட முகாமையாளர் - கொழும்பு), றொபேர்ட் (முகாமையாளர் - இத்தாலி), திருமதி ஜெயபாரதி சுயந் (தாதி - சுவிஸ்), சனார்த்தனன் (கணனி தொழில்நுட்பவியலாளர் - சுவிஸ்), ரமணன் (தொழிநுட்ப பரிசோதனையாளர் - ஜேர்மனி), கார்த்திக் (மின்பொறியியலாளர் - ஜேர்மனி), ரமணி (வங்கி அலுவலகர் - ஜேர்மனி), திரு. திருமதி தேனுஜன் - சுபத்திரா (கணக்காளர் - ஜேர்மனி), திருமதி தெனுசா வீரதினேஷ் (சட்ட உதவியாளர் - ஜேர்மனி), தேனுசன் (சிரேஷ்ட முகாமையாளர் - பிரான்ஸ்), விசாகி (பொறியியல் மாணவி - பிரான்ஸ்), நிலோஜன் (பிரான்ஸ்), வினோதன் (ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம், ஏற்றுமதி விவசாயம்), சாகிர்த்தியா (கொழும்பு மருத்துவபீடம்) ஆகியோரின் அன்புப் பேரனும் சாயின் (சுவிஸ்), வீராதீரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் காலஞ்சென்ற சிவராசா, கனகலிங்கம், தணிகாசலம், குமரகுரு மற்றும் புனிதவதி, சண்முகசுந்தரம், பாஸ்கரன், லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி, கனகதாஸ் மற்றும் சண்முகதாஸ் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 15.05.2025 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் காலை 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனத்திற்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோவிலடி.

021 221 7616
077 494 0541

(4191)

தகவல்:
குடும்பத்தினர்

அல்வாய் வேலிலந்தை
ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானம்
வேலையாட்கள் தேவை

மேற்படி ஆலயத்தில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஒருவர் தேவை. குடும்பத்துடன் தங்குவதாயின் இருப்பிட வசதி செய்து தரப்படும்.
வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 604 7786
077 537 0284
(C-2968)
ஆலய நிர்வாகம்

## கண்ணீர் அஞ்சலி



மருதங்கேணி பிரதேச செயலகத்தில் தையல் போதனாசிரியராக கடமையாற்றும் திருமதி அருள்ராஜ் சங்கீதா அவர்களின் அன்பு மாமனார்

### அமரர் பொன்னையா நாகேஸ்வரா

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(4192)

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம்

# இனப்படுகொலையில் இலங்கை ஈடுபடவில்லை!

## அடம்பிடிக்கும் அலிசப்ரி



(கொழும்பு)

**இலங்கை இனப்படுகொலையில் ஈடுபடவில்லை என தெரிவித்துள்ள முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி கனடாவில் தமிழர் இனப்படுகொலை நினைவுச்சின்னம் திறப்பு, இனப்படுகொலை கல்விவாரம் அனுசரிப்பு போன்றவற்றைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.**

சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் ஒற்றுமை மற்றும் கௌரவம், நல்லிணக்கத்திற்காக ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு குடிமகன் என்ற அடிப்படையில் கனடாவின் ஒன்டாரியோவில் தமிழர் இனப்படுகொலை நினைவுச்சின்னம் திறப்பு, இனப்படுகொலை கல்வி வாரம் அனுசரிப்பு போன்ற விடயங்க்ளால் நான் திகைப்பும் கவலையுமடைந்துள்ளேன்.

ஒரு விடயத்தை நான் தெளிவாக தெரிவிக்க விரும்புகின்றேன், இலங்கை இனப்படுகொலையில் ஈடுபடவில்லை. அந்தக் கூற்று ஆதாரமற்றது மாத்திரமல்ல மிகவும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது.

எந்தவொரு சர்வதேச நீதிமன்றமும் இலங்கையை இதுவரை இனப்படுகொலை குற்றவாளியாகக் கண்டறியவில்லை.

இலங்கையில் நடந்தது துன்பகரமான செயல் ஆனால் கனடா உட்பட 30 இற்கும் அதிகமான நாடுகளில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பினருடனான மோதலை முடிவிற்கு கொண்டுவருவதற்கான இராணுவ நடவடிக்கை ஆகும்.

அது பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எந்த சமூகத்திற்கும் எதிரானது அல்ல.

போரின் போது அப்பாவிகள் ஒவ்வொருவரினதும் உயிரிழப்பு மனவேதனையை ஏற்படுத்தினாலும், மோதலை இனப்படுகொலை என சித்தரிப்பது உண்மையை சிதைப்பது மாத்திரமல்லாமல், அவமதிப்பையும் ஏற்படுத்துகின்ற ஒரு விடயம் ஆகும்.

கனடாவில் இடம்பெறும் இந்த செயற்பாடுகள், நமது கள யதார்த்தங்களில் இருந்து வெகு தொலைவில் உள்ளன.

மேலும் வாக்குவங்கியை நோக்கமாகக் கொண்ட இவ்வாறான நடவடிக்கைகளினால் பழைய காயங்கள் மீண்டும் கிளறப்படலாம்.

மேலும் ஒரு தேசமாக காயங்களை ஆற்றுவதில் அடைந்துள்ள முன்னேற்றத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தலாம் என அவர் பதிவிட்டுள்ளார். (நி-8)

## தேயிலை ஏற்றுமதி வருமானம் உயர்வு

(கொழும்பு)

இந்த வருடத்தில் தேயிலை ஏற்றுமதி மூலம் இலங்கைக்கு 371 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாகக் கிடைத்துள்ளதாக, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து வெளியிடும் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கை 355 அமெரிக்க டொலரை வருமானமாக ஈட்டியிருந்ததாக அவர் தெரிவித்தார்.

இந்தநிலையில், 11 வருடங்களின் பின்னர் தேயிலை ஏற்றுமதியின் மூலம், வருடமொன்றின் முதல் காலாண்டில் இவ்வாறு அதிகூடிய வருமானம் கிடைத்துள்ளது என அவர் சுட்டிக்காட்டினார். (நி-8)



## நீரலையில் அள்ளுண்டு நான்கு இளைஞர்கள் உயிரிழப்பு

### கடலில் நீராடச் சென்ற போது சோகம்

(கொழும்பு)

நீர்கொழும்பு - வென்னப்புவ பகுதியில் உள்ள கடலில் நீராடச் சென்ற நான்கு இளைஞர்களும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நான்கு இளைஞர்களும் ஒன்றாக இணைந்து கடலில் நீராடிக் கொண்டிருந்த போது கடலலையில் அள்ளுண்டு சென்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து வென்னப்புவ பொலிஸார், கடற்படையினரின் உதவியோடு நால்வரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

சடலங்களாக மீட்கப்பட்டவர்களில் மூவர் பொகவந்தலாவ சென் விஜயன்ஸ் தோட்டத்தை சேர்ந்தவர்கள் எனவும் மற்றுமொரு நபர் கொழும்பு பகுதியை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

17 வயதுடைய உதயகுமார் ஸ்ரீதரன், 19 வயதுடைய ஸ்ரீகாந்த் சரண்ராஜ், 18 வயதுடைய ஸ்ரீகாந்த் அஜித் குமார் மற்றும் 27 வயதுடைய யூசுப் ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

சடலங்களாக மீட்கப்பட்டவர்களில் ஸ்ரீகாந்த் சரண் ராஜ் மற்றும் ஸ்ரீகாந்த் அஜித் குமார் ஆகியோர் ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரர்கள் எனவும் உதயகுமார் ஸ்ரீதரன் உறவினர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

## கொத்மலை பேருந்து விபத்து உயிரிழப்பு 24 ஆக அதிகரிப்பு

(நுவரெலியா)

கண்டி - நுவரெலியா வீதியில் கொத்மலை, ரம்பொட கரடி எல்ல பகுதியில் இடம் பெற்ற பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளதாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கண்டி - நுவரெலியா வீதியில் கொத்மலை, ரம்பொட கரடி எல்ல பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் பேருந்து ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்திற்குள்ளானது.

இந்த விபத்தில் 23 பேர் உயிரிழந்திருந்த நிலையில் சுமார் 40 பேர் காயமடைந்து நாவலப்பிட்டி, கம்பளை மற்றும் நுவரெலியா, கண்டி, பேராதனை ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் இளைஞனொருவர் நேற்று புதன்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் திஸ்ஸமஹாராம பகுதியைச் சேர்ந்த 21 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர். (நி-8)

## உயர் இரத்த அழுத்தத்தால் 70 சதவீத மரணங்கள் ஏற்படுகின்றன

### சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

இலங்கையில் ஏற்படும் மொத்த மரணங்களில் 70 சதவீதம், உயர் இரத்த அழுத்தத்தால் ஏற்படும் நோய்களால் நிகழ்கின்றன என சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவு தெரிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டு தொற்றாநோய்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், நாட்டு மக்களில் 34.8 சதவீதமானோர் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களில் 64 சதவீதமானோர் இதற்கு எவ்வித மருந்துகளையும் பயன்படுத்த வில்லை எனவும் விசேட வைத்தியர் சமிந்தி சமரகோன் தெரிவித்தார். (நி-8)

## விளையாட்டுச் செய்திகள்

# கருணாகரன் வெற்றிக்கிண்ணம் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி வசமானது




ஜானுகனின் ஹற்றிக் கோல்களினால் “கருணாகரனின் மகுடம்” கிண்ணத்தைக் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி கைப் பற்றியது.

வடமராட்சி உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகம் நடத்திய வடமராட்சி ரீதியிலான அணிக்கு 9 நபர் கொண்ட கருணாகரனின் மகுடம் 2025 உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மின்னொளியில் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து தேவரையாளி யங்லயன்ஸ் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண் டிருந்தனர்.

இருப்பினும் 21 ஆவது நிமிடத்தில் றேஞ்சஸ் அணி வீரர் ஜானுகன் ஒரு கோலைப் பதிவு செய்ய முதல் பாதியாட்டத்தில் றேஞ்சஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் யங்லயன்ஸ் அணி வீரர்கள் பல தடவைகள் முயற்சித்த போதிலும் றேஞ்சஸ் அணி பின்கள வீரர்கள் தடுத்தாடினர்.

ஆனால் றேஞ்சஸ் அணி வீரர் ஜானுகன் 43ஆவது, 52ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

போட்டியின் ஆட்ட நாயகன் மற்றும் முன்கள வீரனாக றேஞ்சஸ் அணியின் முன்கள வீரன் ஜானுகன், சிறந்த கோல்காப்பாளராக றேஞ்சஸ் அணி வீரர் ஆர்நிகன், சிறந்த பின்கள வீரனாக றேஞ்சஸ் அணி வீரர் லக்சிகனும், தொடராட்ட நாயகன் மற்றும் மக்கள் மனம் கவர்ந்த வீரனாக சுஜாஸ்கான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (6-8-90)

## டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி
### ஆஸி.-தென்னாபிரிக்கா அணிகள் அறிவிப்பு



உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி இங்கிலாந்தில் உள்ள லார்ட்ஸ் மைதானத்தில் எதிர்வரும் ஜூன் 11 ஆம் திகதி தொடங்க உள்ளது.

இந்நிலையில் இந்தப் போட்டிக்கான இரு அணிகளும் தங்களது அணிகளை அறிவித்துள்ளன.

2025 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகள் மோத உள்ளன.

அவுஸ்திரேலிய அணி வீரர்கள் விபரம்: உஸ்மான் கவாஜா, சாம் கோன்ஸ்டாஸ், மார்னஸ் லாபுசாக்னே, கேமரூன் கிரீன், ஸ்டீவ் ஸ்மித், டிராவிஸ் ஹெட், பியூ வெப்ஸ்டர், அலெக்ஸ் கேரி, ஜோஷ் இங்கிலிஸ், மிட்செல் ஸ்டார்க், பாட் கம்மின்ஸ் (கப்டன்), ஜோஷ் ஹேசில்வுட், ஸ்காட் போலண்ட், நாதன் லியோன், மேத்யூ குஹ்னெமன், பிரெண்டன் டாகெட் (டிராவலிங் ரிசர்வ்)

தென்னாபிரிக்கா அணி வீரர்கள் விபரம்: டெம்பா பவுமா (கப்டன்), டோனி டி ஜோர்ஜி, ஐடன் மார்க்ரம், வியான் முல்டர், மார்கோ ஜான்சன், ககிசோ ரபாடா, கேசவ் மகராஜ், லுங்கி என்கிடி, கார்பின் போஷ், கைல் வெர்ரைன், டேவிட் பெடிங்ஹாம், டிரிஸ்டன் ஸ்டப்ஸ், ரியான் ரிக்கல்டன், செனுரன் பட்டுசாமி, டேன் பட்டுசாமி. (6-8)

## போர்த்துக்கல் அணியில் ரொனால்டோவின் மகன்



உலக கால்பந்து வரலாற்றில் அதிக கோல் அடித்த வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவின் மகன் டோஸ் சாண்டோஸ் ஜூனியர் தனது தந்தையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிக் கால்பந்து உலகில் கால் பதித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடந்த விளாட்கோ மார்கோவிக் சர்வதேச தொடரின் முதல் போட்டியில் போர்த்துக்கல் 15 வயதுக்குட்பட்ட பிரிவு தேசிய அணியில் இடம்பெற்ற சாண்டோஸ் அறிமுகமானார். இந்தப் போட்டியில், சாண்டோஸ் இடம்பெற்ற போர்த்துக்கல் இளைஞர் அணி ஜப்பானை 4-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

போர்த்துக்கல் அணிக்காகத் தனது மகன் அறிமுகமானதில் கிறிஸ்டி யானோ ரொனால்டோ தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், “போர்த்துக்கல் அணிக்காக நீ அறிமுகமானதற்கு வாழ்த்துக்கள். உன்னை நினைத்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன்!” என்று ரொனால்டோ பதிவிட்டார்.

இந்தக் கால்பந்து போட்டியைக் காண வந்த ரசிகர்கள் சாண்டோஸ் உடன் செல்ஃபி எடுப்பதில் ஆர்வம் காட்டினர். அவரது தந்தை ரொனால்டோவைப் போலவே, மகன் சாண்டோஸ், 7 ஆம் நம்பர் ஜெர்சியை அணிந்து விளையாடியது குறிப்பிடத்தக்கது. (6-8)

# 38 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இதுவரையான காலப் பகுதியில் 20,000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன் நாடு முழுவதிலும் 38 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை அதி ஆபத்துள்ள டெங்கு அபாய வலயங்களாக தேசிய டெங்கு கட்டுப் பாட்டுப் பிரிவு அடையாளப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் மே மாதத்தில் மாத்திரம் 2,200 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

அதிகரித்து வரும் டெங்கு மற்றும் சிக்குன்குனியாவை ஒழிக்கும் நோக்கில் நுளம்பு பெருகும் இடங்களை இலக்கு வைத்து எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு திட்டத்தை செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது டெங்குக் காய்ச்சல் தொடர்பில் 15 மாவட்டங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் நுளம்பு பெருகும் இடங்களை தடுப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. (ஙி-8)

# பேருந்தின் சக்கரம் கழன்று நுவரெலியாவில் மற்றுமொரு விபத்து



(நுவரெலியா)

நுவரெலியாவில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்தின் சக்கரம் கழன்று விபத்துக்குள்ளான நிலையில் பேருந்தில் பயணித்த நான்கு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நுவரெலியா - வலப்பனை பிரதான வீதியில் உள்ள மஹா ஊவா வளைவு பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வலப்பனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து நுவரெலியாவுக்கு சுற்றுலா சென்ற குழுவினரை ஏற்றிச் சென்ற பேருந்து, மட்டக்களப்புக்கு மீண்டும் திரும்பிக் கொண்டிருந்தபோது, பேருந்தின் முன் பக்க இடது சக்கரம் கழன்று, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்துள்ளது.

பின்னர் பேருந்து சாலையின் இடது புறத்தில் உள்ள மலையில் மோதி நின்றுள்ளது.

பேருந்து விபத்துக்குள்ளான பகுதி செங்குத்தான மற்றும் வளைவுகள் நிறைந்த வீதியாக இருப்பதாகவும், கடந்த காலங்களில் அந்த இடத்தில் பல கடுமையான விபத்துக்கள் நடந்துள்ளதாகவும் உள்ளூர்வாசிகள் தெரிவித்துள்ளனர். (ஙி-8)

# நீண்ட தூர பேருந்து சாரதிகளுக்கு கட்டாய ஓய்வு நேரம் அவசியம்

(கொழும்பு)

கொத்மலை - கெரண்டியெல்ல பகுதியில், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று அண்மையில் விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து, நீண்ட தூரப் பேருந்துகளில் பணிபுரியும் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு வழங்கப்படும் ஓய்வு நேரத்தில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என மோட்டார் போக்குவரத்து ஆணைக் குழுவின் நாயகம் வழக்கறிஞர் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடினமான வீதிகளில் இரவில் பயணம் செய்யும் நீண்ட தூரப் பயணிகள் போக்குவரத்து சேவைகள் குறித்து மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ஙி-8)

# மரண அறிவித்தல்

பிறப்பு -- 1944 -- 01 -- 12



இறப்பு -- 2025 -- 05 -- 14

## வேலுப்பிள்ளை கைலைநாதன்

(ஓய்வுபெற்ற விவசாய ஆலோசகர்- வலயக் கல்வி பணிமனை, யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கைலைநாதன் அவர்கள் 14.05.2025 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (ஓய்வுநிலை ஆசிரியர்)- இராமணி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு-பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சிவமலரின் பாசமிகு கணவரும்,டுசீந்திரா (லண்டன்), Dr. அனுசன் (Consultant dermatologist BH pointpedro, BH Tellippalai), ஜனார்த்தன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரன் (லண்டன்), இளவேணி(வைத்தியர்), நிவேதா(அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனனி ரவீஸ்வரன், தேனுஷான் (தரம்11-யா/பரியோவான் கல்லூரி), அன்புப் பேரனும், விமலோசனி, மீனலோசனி (ஓய்வு நிலைப் பிரதி அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.05.2025 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(சி-2962)

திருநெல்வேலி. தகவல்- குடும்பத்தினர்

# இராசிபலன்

15.05.2025
வைகாசி 01, வியாழக்கிழமை
திருதியை பின்னிரவு 2.54 மணிவரை

கேட்டை பிற்பகல் 1.19மணிவரை
சுபநேரம் 7.23 -8.53மணிவரை
இராகுகாலம் 1.23 - 2.53 மணிவரை
சர்வதேச குடும்ப தினம்

சந்திராஷ்டமம்-
கார்த்திகை, ரோகினி

வளவன்

**மேஷம்** காலைப் பொழுது சலசலப்பாகவும் மாலைப் பொழுது கலகலப் பாகவும் அமையலாம், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**கடகம்** பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், உறவினர்கள் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

**துலாம்** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், தேவையற்ற மனச் சஞ்சலங்களைத்தவிர்ப்பது நல்லது, சுப விரயங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** முக்கியமான பொறுப்புகளை மதியத்திற்கு முன்னர் செய்து முடிப்பது நல்லது, வழி பாட்டால் திருப்தி காணும் நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்,

**சிம்மம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** தொழிலில் வளர்ச்சி கூடும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப் புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், அனைத்திலும் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், கல்யாணக் கனவுகள் னவாகலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கடன் சுமை குறையும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**தனுசு** சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், சோம்பல்களை விலக்குவது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, வழமையான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மீனம்** செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.

தீயோரை மதித்து நட்பு பூண்டால் அவரால் நாம் பெருத்த இழப்புக்கு ஆளாவோம்.

# தமிழினப் படுகொலையின் வலி சுமந்த ஊர்திப் பவனி

## நல்லூரிலிருந்து நேற்று ஆரம்பமானது

**யாழ்ப்பாணம்**

**முள்ளிவாய்க்கால் தமிழினப் படு கொலையின் வலி சுமந்த ஊர்திப் பவனியானது யாழ்ப் பாணம் நல்லூரில் அமைந் துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் இருந்து நேற்று ஆரம்பமானது.**








தமிழினப் படுகொலையைச் சித்திரிக்கும் விதமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் குறித்த ஊர்திப் பவனியானது முன்னெடுக்கப்பட்டது

"தமிழினப் படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும், தேசம், இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி வேண்டும்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் கட்டப்பட்டு இனப்படுகொலை நினைவுத் தூபி வைக்கப்பட்டுள்ள நிலையில், வீதிகளில் பயணித்த பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை வாரம் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில் இந்த ஊர்திப்பவனி ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று இறுதியாக முள்ளிவாய்க்காலை சென்றடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 16 ஆம் ஆண்டு நினைவாக இரத்ததான முகாம் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை நல்லூர் தியாக தீபம் நினைவிட முன்றலில் இடம் பெறவுள்ளதென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(3-8)

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு 80 டிப்பர் மணல் ஏலவிற்பனை நடைபெறவுள்ளது.

ஏலவிற்பனைக்கான மணலினை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியுமென கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அருள்மிகு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளன.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை கொடியிறக்கமும் இடம்பெற்று 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை திருவூஞ்சல் திருவிழாவும் இடம்பெறவுள்ளதென ஆலய தர்மகர்த்தா இ.குமாரவடிவேல் தெரிவித்துள்ளார். (3-8)

## 'இரண்டாம் சங்கிலிய மன்னனின் 406 ஆவது நினைவு நாள் நிகழ்வுகள்'

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதித்தமிழ் மன்னன் 2 ஆம் சங்கிலியனின் 406 ஆவது நினைவு நாளை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரைச் சந்தியிலுள்ள சங்கிலியன் சிலையடியில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஓய்வு நிலை விரிவுரையாளர் பேராசிரியர் க. தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் ஆசியுரையினை மருதனார் மடம் ஸ்ரீ சுந்தரேச ஆஞ்சநேயர் ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள், யாழ்ப்பாணம் நாகவிகாரை விகாரபதி வன. கலைமாமணி. மீகஹஜந்துக ஸ்ரீ விமல தேரர், சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் ஆகியோரும் வழங்கவுள்ளனர். பிரதம விருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் ஸ்ரீ சாய்முரளியும் கலந்து கொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வின்சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர சபை ஆணையாளர் (நல்லூர்) ச. கிருஷ்ணேந்திரன், யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்த தலைவர் கலாநிதி பொ.சந்திரசேகரன், யாழ். போதனா வைத்திசாலை நிர்வாக அதிகாரி டாக்டர் த. குகதாசன், யாழ்ப்பாணம் தொல்லியல் திணைக்கள மேலாய்வு உத்தியோகத்தர் அருள்மொழி வாருதி மற்றும் சைவப்புலவர் க.கையிலை வாசன், யாழ்ப்பாணம் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தேசிய அமைப்பாளர் கலாநிதி கு. சுரேந்திரன், தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் வே. கமலேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்ததினர்களாக தொழிலதிபர் ஈ.எஸ். பி நாகரத்தினம், இணுவில் அண்ணா தொழிலக தொழிலதிபர் ந. திவாகர், யாழ்ப்பாணம் ராஜா கிறீம் கவுஸ் தொழிலதிபர் எஸ் சண்முகாநந்தன், யாழ்ப்பாணம் தமிழ் காங்கிரஸ் மற்றும் இந்து ஒற்றுமை அமைப்பின் தலைவர் பௌத்த காங்கிரஸ் மற்றும் இந்து பௌத்த ஒற்றுமை அமைப்பின் தலைவர் கலாநிதி சி. மோகன், யாழ்ப்பாணம் கிருபா லேணர்ஸ் முதல்வர் திருமதி கிருபாகரன் தனித்தா, கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப் பின் தலைவர் செ.ஜெக பாலன் ஆகியோர் கலந்து சிறபிக்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(3-8)

## குமுதினி படுகொலையின் 40 ஆவது நினைவேந்தல் இன்று

(யாழ்ப்பாணம்)

குமுதினி படுகொலையின் 40 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று வியாழக் கிழமை நெடுந்தீவில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று காலை 8 மணியளவில் மாவிலித்துறை வீரபத்திரப்பிள்ளையார் ஆலயம், மாவிலித்துறை சவேரியார் ஆலயம் மற்றும் தேவ சபை ஆலயம் என்பவற்றில், படு கொலை செய்யப்பட்ட உறவு களின் ஆத்மா சாந்திக்கான வழிபாடுகள் சம நேரத்தில் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு மாவிலித்துறைமுகப் பகுதியில் படு கொலை செய்யப்பட்டோர் நினைவாக அமைக்கப்பட் டுள்ள நினைவுத்தூபி வளாகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது.

1985.5.15 அன்று காலை பல கனவுகளுடன் நெடுந்தீ வில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி குமுதினி படகில் பயணித்த தமிழர்கள் படு கொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)



மண்டைதீவு வழிப்பிள்ளையார் ஆலயத்தின் போசகரான வடக்கு மாகாண ஓய்வுநிலை பிரதம செயலாளர் இலட்சுமணன் இளங்கோவனுக்கு ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் பிள்ளையாரின் நல்லாசி வேண்டி விசேட பூசை வழிபாடாற்றி ஆலய முன்றலில் ஊர்மக்கள் சேர்ந்து கௌரவிப்பு செய்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம்.

# சின்னம்மை நோயாளர்கள் நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் சின்னம்மை நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

சின்னம்மை என்பது வெரிசெல்லா-ஜோஸ்டர் வைரஸ் தொற்றால் ஏற்படும் நோயாகும். இந்த வைரஸ் சின்னம்மையால் பாதிக்கப்பட்ட தடுப்பூசி போடாத நபர்களிடமிருந்து மற்றையவர்களுக்குப் பரவுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தி இல்லாத மற்றும் பாதிக்கப்பட்ட நபருடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவர்களில் 90 சதவீதமானோருக்கு பரவக்கூடும்.

இந்த நோய் பொதுவாக நான்கு முதல் ஏழு நாட்கள் வரை நீடிக்கும். சின்னம்மையைத் தடுப்பதற்கான சிறந்த வழி சின்னம்மை தடுப்பூசியைப் பெறுவதே என தெரிவித்துள்ளார்.

நோயாளிக்கு சின்னம்மை தொற்று ஏற்பட்டு 72 மணி நேரத்திற்குள் (மூன்று நாட்கள்) தடுப்பூசி போடுவது சிறந்ததாகும்.

சிறுவர்கள், இளம் வயதினர் மற்றும் ஒருபோதும் சின்னம்மை நோயால் பாதிக்கப்படாதவர்கள் அல்லது தடுப்பூசி செலுத்தப்படாத பெரியவர்கள் உட்பட அனைவருக்கும் சின்னம்மை தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகிறது.

தடுப்பூசி செலுத்தப்பட்டவர்கள் பெரும்பாலானவர்கள் இந்த நோயால் பாதிக்கப்படமாட்டார்கள்.

உரிய காலத்தில் தடுப்பூசியை செலுத்துவதால் சின்னம்மை வருவதற்கான அபாயத்தைக் கணிசமாகக் குறைக்கலாம் அல்லது தொற்று ஏற்பட்டால் நோயின் தீவிரத்தைக் குறைக்கலாம். 13 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இரண்டு டோஸ் தடுப்பூசியை செலுத்த வேண்டும்.

சின்னம்மை நோய் சாதாரணமானதாக காணப்பட்டாலும், கர்ப்பிணிப் பெண்கள், 12 மாதங்களுக்கும் குறைவான சிறுவர்கள், இளம் வயதினர், பெரியவர்கள் மற்றும் பலவீனமான நோய் எதிர்ப்பு சக்தி உள்ளவர்களுக்கு கடும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# வன்கொடுமைகள் தொடர்பில் 1929 இற்கு முறையிடலாம்

(கொழும்பு)

பாடசாலைகளில் இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் முறையிடுவதற்கு 1929 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த அவசர தொலைபேசி இலக்கம் 24 மணி நேரமும் சேவையில் இருக்கும்.

எனவே, பாடசாலைகளில் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றால் பாடசாலை அதிபர்கள் அல்லது பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவ, மாணவிகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடு அளிக்குமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

பாடசாலைகளில் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ncpa@childprotection.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் முறைப்பாடு அளிக்க முடியும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-8)


## அரியாலை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## கணக்காளர் நிரந்தர பதவி

**பின்வரும் நிபந்தனைகளுக்கமைய கணக்காளர் (104/10) நிரந்தர பதவிக்கு வெளிவாரியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**01.பதவி** :- **கணக்காளர் (104/10)**
**02.வெற்றிடம்** :- **01**
**03.சம்பள அளவு** :- **19745.00 225X10- 250X10-24495.00 236940-2700X10 3000X10-293940.00**

A. கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்குப் பதிவாளர் / கணக்கு / கணக்காய்வு எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்

கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் கணக்குப் பதிவாளர் கணக்கு/ கணக்காய்வு எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

B. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா / இதற்கு சமனான தகைமை / மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி

அல்லது

C. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 2 ஆண்டு கால அனுபவம் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 02 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த.உயர்தரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட 3 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 3 ஆண்டு அனுபவம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 3 ஆண்டு கால அனுபவம்

**குறிப்பு :-**

1. விண்ணப்பப் படிவங்களைச் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2. வயதெல்லை 18-45 கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கு இவ் வயது எல்லை ஏற்புடையதல்ல. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் சங்கங்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
3. அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவு படியும் வழங்கப்படும்.
4. சங்க எல்லைப் பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. விண்ணப்பங்கள் யாவும் 30.05.2025 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு **தலைவர், அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இலக்கம், 15 நடுதெருலேன், அரியாலை** என்ற முகவரிக்கு பதிவு தபாலிலோ, நேரடியாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

**தலைவர்**
**15.05.2025** (சி-4190)



## யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)

## பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக் கூட்டம்-2025

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 08.06.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு கல்லூரி பேச் மண்டபத்தில் நடைபெறவுள்ளதை அனைத்து பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைவதோடு அனைத்துப் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன். தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கான வேட்புமனுக்களும், பிரேரணைகளும் 30.05.2025 வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு முன்பாக கீழ்க்காணும் முகவரியில் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கான வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றதும் 01.06.2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் நிர்வாக சபைக்கூட்டத்தில் ஆராயப்பட்டபின் பொதுச் சபையின் அங்கீகாரத்திற்கு விடப்படும்.

**அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

C.P.M வீதி,
நவாலி தெற்கு. (C-2963)

திரு.சி.சிவச்செல்வன்,
செயலாளர்.



## சேவை நலன் பாராட்டு

திருமதி.
**ஜெயபாரதி விமலன்**
ஆரம்பக் கல்வி (SLTS-I)




சேவை விபரம்

- யா/நாவற்குழி மகா வித்தியாலயம் (1988.08.17-1992.01.19)
- யா/கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை (1992.01.20-1993.12.31)
- யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் (1994.01.01-1996.05.12)
- முல்/பாண்டியன் குளம் மகாவித்தியாலயம் (1996.05.13-1997.12.31)
- யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் (1998.01.01-1998.12.31)
- யா/நல்லூர் சென்பெனடிக்ற் றோ.க.வித்தியாலயம் (1999.01.01-2013.12.31)
- யா/ ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம் (2014.01.02-2025.05.15)

(4180)

ஆசிரியராக, பிரதி அதிபராக அளப்பரிய சேவையாற்றி 2025.05.15 இன்று ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்ற எமது வித்தியாலய ஆசிரியை திருமதி.**ஜெயபாரதி விமலன்** அவர்களை வாழ்த்துவதுடன், அவரது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்- பாடசாலை சமூகம்
யா/ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம்.

## பாரதம்

# பல கோடி பெறுமதியான விமானம்; ட்ரம்பிற்கு பரிசாக வழங்கியது கட்டார்



(ரியாத்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மத்திய கிழக்கு நாடுகளுக்கு நான்கு நாள் பயணம் மேற்கொண்டுள்ளார். முதல் நாடாக நேற்று முன்தினம் சவுதிக்கு சென்றார்.

சவுதியின் ரியாத்தில் நடக்கும் வளைகுடா ஒத்துழைப்பு மன்ற உச்சி மாநாட்டில், ஈரானின் அணுசக்தி திட்டம், காசா போர் மற்றும் சவுதி - இஸ்ரேல் உறவு குறித்து விவாதிக்கப்படவுள்ளது.



இந்நிலையில், கட்டார் மன்னர் குடும்பம், ஜனாதிபதி ட்ரம்புக்கு பல கோடி ரூபாய் மதிப்பிலான "போயிங் 747-8" என்ற ஆடம்பர விமானத்தை பரிசாக வழங்க முன்வந்துள்ளது.

இதற்கு, அமெரிக்க எதிர்க்கட்சியினர் மட்டுமின்றி, ட்ரம்பின் குடியரசு கட்சியைச் சேர்ந்த சிலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அவர் அளித்த பதிலில், "இந்த மாதிரியான பரிசை நான் ஒருபோதும் நிராகரிக்க மாட்டேன். இதை மறுப்பதற்கு நான் முட்டாளும் இல்லை. தற்காலிக "ஏர் போர்ஸ் ஒன்" விமானமாக இது செயற்படும். என் பதவிக் காலத்துக்கு பின் ஜனாதிபதி அருங்காட்சியகத்துக்கு நன்கொடையாக வழங்குவேன்." எனத் தெரிவித்தார். (நி-8)

# மிரட்டிப் பணிய வைக்க நினைத்தால் தனிமைப்படுத்தப்படுவீர்கள்

## அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை



(பீஜிங்)

வர்த்தகப் போர்கள் யாருக்கும் பயனளிக்காது. வெற்றியாளர்கள் என்று யாரும் இல்லை. உலகின் அனைத்து நாடுகளும் ஒன்றுக்கொன்று ஒத்துழைத்து, ஒன்றிணைந்து செயற்படும்போதுதான் உலக அமைதியும் ஸ்திரத்தன்மையும் சாத்தியமாகும் என்று சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்தார்.

பிரேசில், கொலம்பியா மற்றும் சிலி நாட்டுத் தலைவர்களுடன் பெய்ஜிங்கில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சீனா மீது வரிவிதிப்பு மூலம் தொடங்கிய வர்த்தகப் போரை முடிவுக்குக் கொண்டுவர இரு நாடுகளும் சுவிட்சர்லாந்தில் பேச்சுவார்த்தை நடத்தின. பேச்சுவார்த்தை முடிவில் சீனப் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட கூடுதல் வரியை 90 நாட்களுக்கு இடைநிறுத்துவதாக அமெரிக்கா அறிவித்தது.

இதனை தொடர்ந்து அமெரிக்க பொருட்கள் மீதான வரியை சீனா குறைத்தது. அதன்படி, சீன பொருட்கள் மீதான வரியை 145 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாக அமெரிக்கா குறைத்தது.

அதேபோல், அமெரிக்க பொருட்கள் மீதான வரியை 125 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக சீனா குறைத்தது. இந்நிலையில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தனது உரையில் அமெரிக்காவை மறைமுகமாக மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார். (நி-8)

# காசாவுக்குள் முழுப் பலத்துடன் இஸ்ரேல் இராணுவம் நுழையும்

## நெதன்யாகு எச்சரிக்கை



(ஜெருசலேம்)

வரும் நாட்களில் இராணுவம் முழுப்பலத்துடன் காசாவுக்குள் நுழையும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினரிடையே ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக போர் நீடித்து வருகிறது.

இரு தரப்பினருக்கும் இடையே கடந்த ஜனவரியில், 42 நாட்களுக்கான முதற்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

அது முடிந்த பின், போர் நிறுத்தத்தை நீட்டிப்பதற்கான ஒப்பந்தத்தில் இஸ்ரேல் பல்வேறு நிபந்தனைகள் விதித்தது.

குறிப்பாக பணயக் கைதிகளை விடுவிக்காவிட்டால் தாக்குதல் தொடரும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில், ஹமாஸ் படையினரை அழிக்க, எதிர்வரும் நாட்களில் இராணுவம் முழு பலத்துடன் காசாவுக்குள் நுழையும் என பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

போர் நடந்து வருவதற்கு எதிராக, சர்வதேச கண்டனங்கள் இருந்த போதிலும், இஸ்ரேல் தனது தாக்குதலை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி-8)

## வெளிநாடு

# பட்டினியால் வாடும் 50 லட்சம் மக்கள்!

## ஒரு தலைமுறையே அழியும் அபாயம்

## எச்சரிக்கும் ஐ.நா



**(காசா)**

**போரினால் பாதிக்கப்பட்ட காசாவுக்குள் கடந்த 10 வாரங்களாக உணவு, மருந்து மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அனைத்து உதவி விநியோகங்களும் இஸ்ரேலால் நிறுத்தப்பட்டுள்ளன.**

ஐ.நா மற்றும் சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நியமிக்கப்பட்ட ஒரு சுயாதீன கூட்டமைப்பான ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்பு அமைப்பு அதன் சமீபத்திய அறிக்கையில், காசாவில் உணவுப் பாதுகாப்பு நிலைமை ஒக்டோபர் 2024 இல் அதன் கடைசி மதிப்பீட்டிலிருந்து கணிசமாக மோசமடைந்துள்ளதாகவும், அங்கு வாழும் பாலஸ்தீனியர்கள் பஞ்சத்தின் கடுமையான அபாயத்தை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளது.

மக்கள் உயிர்வாழ்வதற்கான அத்தியாவசியப் பொருட்கள் ஏற்கனவே பெரும்பாலான இடங்களில் தீர்ந்து போயுள்ளன. சில இடங்களில், வரும் வாரங்களில் அது முடிந்துவிடும். அனைத்து மக்களும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கிறனர்.

காசாவில் 50 லட்சம் மக்கள், அதாவது ஐந்தில் ஒருவர் கடுமையான பசியை எதிர்கொள்கிறார்கள் என்று ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஐ.நாவின் உலக சுகாதார அமைப்பின் அதிகாரி ரிக் பெப்பர்கார்ன், மனிதனால்உருவாக்கப்பட்ட இந்தப் பஞ்சம், உணவு கிடைக்காத ஒரு முழு தலைமுறை குழந்தைகளையும் என்றென்றும் பாதிக்கும் என்று எச்சரிக்கிறார்.

காசா பஞ்சத்தின் உடனடி ஆபத்தை எதிர்கொள்கிறது என்று ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பும் எச்சரித்துள்ளது.

மீதமுள்ள 59 பணயக்கைதிகளை விடுவிக்க ஹமாஸ்க்கு அழுத்தம் கொடுப்பதே இந்த முறுகையின் நோக்கம் என்று இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஙி-8)



# அமெரிக்காவில் 600 பில்லியன் டொலர்களை முதலீடு செய்யும் சவுதி அரேபியா

(ரியாத்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 4 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளார்.

ஜனாதிபதியாக இரண்டாவது முறையாக பதவியேற்ற பின் ட்ரம்ப் மேற்கொள்ளும் முதல் மத்திய கிழக்கு பயணம் இதுவாகும்.

பயணத்தின் முதல் நாடாக ட்ரம்ப் சவுதி அரேபியாவுக்குச் சென்றுள்ளார். தனி விமானம் மூலம் ரியாத் சென்ற ட்ரம்பை சவுதி இளவரசர் முகமதுபின் சல்மான் விமான நிலையத்திற்கே நேரில் சென்று வரவேற்றார்.

அதன்பின் டொனால்ட் ட்ரம்பும், முகமதுபின் சல்மானும் பல்வேறு விவகாரங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

வர்த்தகம், இருநாட்டு உறவு, இஸ்ரேல் - ஹமாஸ் போர், ஈரான் விவகாரம், மசகு எண்ணெய் உட்பட பல்வேறு விவகாரங்கள் தொடர்பில் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்காவில் 600 பில்லியன் டொலர்களை முதலீடு செய்ய சவுதி அரேபியா திட்டமிட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் டொனால்ட் ரம்ப் மற்றும் முகமது பின் சல்மான் இடையே கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அதேபோல், அமெரிக்காவில் இருந்து 142 பில்லியன் டொலர்கள் மதிப்பிலான இராணுவ ஆயுதங்களை சவுதி அரேபியா கொள்முதல் செய்யும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த முதலீடு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகள் இடையே உறவை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஙி-8)



# போக்குவரத்து விதிகளை மீறிய வாகனங்கள் பறிமுதல்

(கொழும்பு)

கடந்த இரண்டு நாட்களில் போக்குவரத்து விதிகளை மீறிய குற்றச்சாட்டில் உந்துருளிகள் உட்பட 100இற்கும் மேற்பட்ட வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பண்டாரகம, கிதேல்பிடிய பகுதி களில் அதிக திறன் கொண்ட 4 மோட்டார் சைக்கிள்களை பொலிஸார் கைப்பற்றி யுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக 21 முதல் 23 வயதுக்குட்பட்ட நால்வர் கைது செய்யப்பட்டனர்.

மேலும் அத்துருகிரிய மற்றும் கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவுகளில் மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகளின் மோட்டார் சைக்கிள்கள், கார்கள் ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-8)

# கொத்மலை விபத்து

## உயிரிழந்தவர்களுக்கு நிதியுதவி

(ஹற்றன்)

கொத்மலை, கெரண்டியெல்ல பகுதியில் அண்மையில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்க ளுக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அறிவுறுத்தலின் பேரில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட நிதி, சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, விபத்தில் உயிரிழந்த ஒவ்வொரு நபர் சார்பாகவும், தலா ஒரு மில்லியன் ரூபாய் வழங்கப்படுவதோடு, அந்தப் பணம் இறந்தவரின் குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983- இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>2இல் செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L,சுயதொழில்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15458 | பிறப்பு: 2000-இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Bsc, Teacher<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Teacher<br>தொ.இ: G/14590 |
| பிறப்பு: 1994-இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்-MBBS,Doctor<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15459 | பிறப்பு: 1994-இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Network Telecom Engineer(London)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14593 |
| பிறப்பு: 1994-இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா-55<br>உயரம்: 5'9"<br>தகைமைஃதொழில்:BSc, Senior Software Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15460 | பிறப்பு: 1998-இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா-67<br>தகைமை/ தொழில்: BA (following)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/14596 |
| பிறப்பு: 1981 - NRC<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Banking Course, Canada<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/15468 | பிறப்பு: 1997-இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா-06<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் - Network System Engineer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம், வெளிநாடு<br>தொ.இ: G/14599 |
| பிறப்பு: 1986- இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>1இல்செவ்<br>உயரம்: 6"<br>தகைமை/தொழில்: A/L, Manager(London)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15469 | பிறப்பு: 1991 - இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>7இல் செவ்<br>கி.பா-15<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: London.<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு UK மட்டும்.<br>தொ.இ: G/15030 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 076 097 3120

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 373



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அறிவும் உணர்ச்சியும்!

ஒருவர் வேகமாக நடந்து போகிறார். கடைத்தெருவிலே ஒரு இனிப்புக் கடையைப் பார்க்கிறார். உடனே "சடன் பிரேக்" போட்டது போல நிற்கிறார்.

"ஒரு இனிப்பு வாங்கி சாப்பிடலாமே!" என்று மனம் சொல்லுது

"டாக்டர் வேணடாம் என்று சொல்லியிருக்கிறார். உடம்பிற்கு ஒத்துக்காது அதனாலே அது வேண்டாம்!"என்று சொல்கிறது அறிவு.

இவர் மனது சொல்வதைக் கேட்கவில்லை.

அறிவு சொல்றபடி கேட்கிறார்.

அதனாலே மறுபடியும் வேகமாக அங்கேயிருந்து நடந்து போகிறார். அவர் நல்ல மனிதன்.

மனிதனுக்கு அறிவும் இருக்கிறது. உணர்ச்சியும் இருக்கிறது. எதற்கெடுத்தாலும் உணர்ச்சி வசப்பட்டுக்கொண்டிருக்கக்கூடாது அறிவு வசத்திலே நாம் இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் நல்லபடியாக வாழமுடியும். இல்லை என்றால் அவஸ்தைதான்."

மகாபாரதத்திலே சந்தனு என்று ஒரு அரசன் வருகிறான். அவன் ஒரு சமயம் அறிவு வசப்படாமல் உணர்ச்சி வசப்படுகிறான். அதாவது ஒருநாள்

கங்கைக் கரையிலே ஒரு அழகான பெண்ணைப் பார்க்கிறான். இவனுடைய மனது அவளிடம் போகிறது அவளைத் திருமணம் செய்வதற்கு ஆசைப்படுகிறான். அந்தப் பெண்ணும் சரி என்று சம்மதிக்கிறாள்.

ஆனால் ஒரு நிபந்தனை போடுகிறாள். அந்த நிபந்தனைக்குச் சம்மதம் என்று சொன்னால்தான் உன்னைத் திருமணம் செய்வேன் என்று சொல்கிறாள்!

சரி.. அவள் போட்ட நிபந்தனை என்ன தெரியுமா?

இது மாதிரி.

"நான் உங்கள் மனது புண்படும் மாதிரி எந்த காரியம் செய்தாலும் சரி. நீங்கள் என்னை ஏன் என்று கேட்கக்கூடாது! நான் செய்யும் காரியத்தைத் தடுக்கவும் கூடாது அப்படி நீங்க செய்தால்அடுத்த கனமே நான் உங்களைப் பிரிந்து சென்று விடுவேன்!"

இதுதான் அந்தப் பெண் போட்ட நிபந்தனை.

சந்தனு அரசன் இந்த நிபந்தனையை ஒத்துக் கொள்ளலாமா? அறிவுபூர்வமாக யோசித்திருந்தால் இதற்குக் கட்டுப்பட்டிருக்க மாட்டான் இந்த நிபந்தனைக்கு நான் சம்மதிக்க மாட்டேன் என்று தானே சொல்லியிருக்க வேண்டும்!

அவன் அந்த நேரத்துலே உணர்ச்சிவசத்திலே இருந்தான் அதனாலே நீ என்ன சொன்னாலும் சரி என்று ஒத்துக்கொண்டார். அவளைத் திருமணமும் செய்துகொண்டார். இதனாலே என்ன ஆனது?

ஏழு பச்சிளங்குழந்தைகளை பிறந்தவுடனேயே அவள் கங்கையிலே தூக்கியெறிந்து கொல்லும் கோரக்காட்சியை இவன் பின்னாடி பார்க்க வேண்டியதாக போய்விட்டது!

கடைசியிலே எட்டாவது குழந்தை பிறந்ததும்தான் அவனுடைய அறிவு மேலோங்குகிறது! அந்தக் கொடிய செயலைத் தடுத்து நிறுத்துகிறான்.

அந்த எட்டாவது குழந்தைதான் பின்னால் பீஷ்மராக ஆகிறார்.

ஒரு பக்திப் பிரசங்கத்திலே ஒரு பேச்சாளர். இந்த விவரத்தைச் சொல்லிவிட்டு இன்னொரு விடயமும் சொன்னார்.

அது என்னவென்றால். சந்தனு மன்னன் அறிவுக்கும் உணர்ச்சிக்கும் நடுவிலே அகப்பட்டுத் தவித்ததினாலே.

அவன் வம்சத்திலே வந்த கௌவரவர்கள் உணர்ச்சி வசப்பட்டார்கள். பாண்டவர்கள் அறிவு வசப்பட்டார்கள் என்று சொன்னார்.

மனிதனுக்கு உணர்ச்சியை விட அறிவு மேலோங்கியிருக்க வேண்டும் சரிதான். ஆனாலும் அந்த அறிவை எப்படி உபயோகப்படுத்துகிறோம் என்பது தான் முக்கியம்.

ஒருவர் சொன்னார். கோயம்புத்தூரிலே ஒரு திருமண வீடு. அதற்கு நான் போகமுடியவில்லையே என்று நினைக்கும்போது மனதுக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது என்றார்.

மிகவும் உணர்ச்சி வசப்பட்டார்.

"அதற்காக கவலைப்படாதீர்கள் சேர். ஒரு வாழ்த்துத் தந்தி கொடுத்து விடுங்கள்!" என்றார் இன்னொருவர்.

"அது எப்படி சேர் முடியும்?" என்றார் அவர். "நான்தானே சேர் கல்யாண மாப்பிள்ளை என்றார் அந்த ஆள்.

# உரிய தீர்வு வேண்டும்

## ஆனையிறவு உப்பள ஊழியர்கள்

## கவனயீர்ப்பு போராட்டம்

(தருமபுரம்)

**பல்வேறு பிரச்சினைகளை சுட்டிக்காட்டி கிளிநொச்சி , ஆனையிறவு தேசிய உப்பளத்தில் பணிபுரியும் ஊழியர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.**



கிளிநொச்சி ஆனையிறவு தேசிய உப்பளத்தில் தற்காலிகமாக பணியாற்றும் ஊழியர்கள் தமக்கான நிரந்த நியமனம், மேலதிக கொடுப்பனவுகள் , மற்றும் தமக்கான அடிப்படைவசதிகள் உள்ளிட்ட வற்றை கோரி குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் ரஜ உப்பு என்ற பெயரினை மாற்றம் செய்து ஆனையிறவு உப்பு என்ற பெயர் மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் ஆனால் இது வரை பொதியிடப்பட்ட உப்பு பொதிகளில் ரஜ உப்பு என்றே காணப்படுவதாக தெரிவித்தனர்.

குறித்த இடத்திற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மற்றும் பொலிஸார் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

அதேவேளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்களுடைய கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் எஸ். முரளிதரனிடம் கையளித்திருந்தனர். (6-8-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 550 | 400 | 500 | 600 |
| உருளைக்கிழங்கு | 240 | 230 | 230 | 200 | 250 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 150 | 200 |
| தக்காளி | 1200 | 1200 | 1200 | 750 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 290 | 300 | 350 | 200 |
| கோவா | 550 | 550 | 600 | 350 | 600 |
| கரட் | 950 | 750 | 1200 | 900 | 1000 |
| பூசணி | 180 | 180 | 180 | 180 | 200 |
| புடோல் | 300 | 300 | 200 | 200 | 400 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 300 | 150-320 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 150 | 180 | 150 | 150 |
| பாகற்காய் | 1200 | 800 | 1000 | -- | 1000 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 200 | 400 |
| பயற்றங்காய் | 400 | 300 | 600 | 200 | 300 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 210 | 400 |
| பீற்றூட் | 600 | 500 | 600 | 500 | 800 |
| கறிமிளகாய் | 800 | 600 | 600 | 450 | 800 |
| முருங்கைக்காய் | 2200 | 3000 | 2000 | 2000 | 2000 |
| போஞ்சி | 800 | 800 | 1000 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 550 | 400 | 350 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 180 | 150 | 150 | 100 | 200 |
| தேசிக்காய் | 300 | 400 | 400 | 350-420 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 280 | 250 | 120-220 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 700 | 1000 | 450 | 700 |
| வெங்காயப்பூ | -- | 600 | 600 | 700 | 800 |
| முள்ளங்கி | 150 | 200 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | -- |

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3322

### சுரேஷ்

பெண்கள் கங்காவா இருந்து சந்திரமுகியாக மாறுவதும்...



ஆண்கள் பாட்ஷாவாக இருந்து மாணிக்கமாக மாறுவதும் தான் கல்யாண வாழ்க்கை

### தனலட்சுமி

வரன் பார்க்கும் போது...
பெண் வீட்டில அடக்கமான பொண்ணு என்பதும்
மாப்பிள்ளை வீட்டில தங்கமான பையன் என்பதும்



அடித்துவிடும் பொய்களில் இரண்டு

### சாய்ராதன்

மச்சான் வெயிலுக்க புதுசா AC வாங்கியிருக்கேன்டா... எப்படி குளுகுளு காத்து வருதா...



என் ஆளோட மூச்சுக்காத்து அளவுக்கு குளுகுளு என்று இல்லடா மச்சான்

### நர்த்தனா

உடனே தூக்கம் வந்திடுது மாமா
படுத்த உடனே தூக்கம் வாறது நல்லது தானே மாப்பிள்ளை
படுத்த உடனே இல்லை மாமா
வேலைக்கு போனதுமே வந்திடுது



### பிவிஸ்னன்

கடலில் விழுந்த குண்டூசியைத் தேடுவதும் கல்யாணம் முடிந்து சந்தோசத்தை தேடுவதும்



ஒன்று தான் கிடைக்கவே கிடைக்காது

### லோசினி

நீ தேவைப்படாத வரை உன்னை ஒதுக்கி வைப்பார்கள்



நீ தேவைப்பட்டால் உன் புகழ் பாடுவார்கள்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 772





ஆகையால் கடைசியாக நந்தினியின் அறை அலங்காரத்தை மணிமேகலை மேற்பார்வை செய்து கொண்டிருந்தாள். அப்போது பழுவூர் ராணிக்காகச் சுவர் ஒரமாகப் பொருத்தி வைக்கப்பட்டிருந்த முகம் பார்க்கும் கண்ணாடியின் எதிரில் வந்தாள். தன்னுடைய முகத்தை அதில் பார்த்துக் கொண்டாள். சிறிது நேரம் நிதானமாகவே பார்த்தாள். அப்படியொன்றும் தன் முகம் அழகில் குறைந்ததல்ல என்று தனக்குத்தானே முடிவு செய்து திருப்தி அடைந்தாள். கண்ணாடியை விட்டுப் போக எண்ணிய போது, அதில் இன்னொரு முகமும் தெரிந்தது. அது தன் முகத்தின் வெகு அருகில் வந்து கன்னத்தோடு கன்னம் ஒட்டும் நிலைக்கு வந்து விட்டது. அவள் கனவில் அடிக்கடி தோன்றித் தொல்லை செய்து கொண்டிருந்த வாணர் குல வீரனின் முகந்தான் அது. அவளை அறியாமல் அவளுடைய வாய் குவிந்து, 'கூ!' என்று சத்தமிட்டது. அடுத்த கணம் கண்ணாடியில் அவள் முகம் மட்டுந்தான் தெரிந்தது மற்றொரு முகம் மறைந்துவிட்டது.

### ஏழாம் அத்தியாயம்
### வாலில்லாக் குரங்கு

மணிமேகலை சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தாள். தான் சற்று முன் கண்ட தோற்றம் வெறும் பிரமைதானா? அல்லது கனவில் கண்ட தோற்றமா? கனவாக இருந்தால் நான் தூங்கிக் கொண்டல்லவா இருக்க வேண்டும்? தன்னைத் தானே தொட்டுப் பார்த்துக் கொண்டாள் இல்லை, தான் தூங்கவில்லை. பழுவூர் இளையராணிக்காக ஆயத்தமாயிருக்கும் அந்தப்புர அறை அல்லவா இது? பளிங்குக் கண்ணாடியில் தன் முகம் இதோ நன்றாகத் தெரிகிறது. அதோ குத்துவிளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. கண்ணாடிக்கு எதிரே சுவரை உற்றுப் பார்த்தாள்.

அங்கே ஓர் இரகசிய வாசல் இருப்பது அவளுக்குத் தெரியும். அதை வெளியிலிருந்தும் திறக்கலாம். உள்ளிருந்தும் திறக்கலாம். மணிமேகலை அந்த இடத்தில் சுவர் ஓரமாக நின்று காதைச் சுவரோடு ஒட்டி வைத்து உற்றுக் கேட்டாள். அவ்விடத்தில் சுவரோடு சுவராக இருந்த இரகசியக் கதவு மரத்தினால் ஆனதுதான். ஆகையால் உள்ளே வேட்டை மண்டபத்தில் ஏதோ ஓசைப் பட்டது போல் கேட்டது.

மணிமேகலை மெதுவாக இரகசியக் கதவை திறந்தாள். வேட்டை மண்டபத்தில் எட்டிப் பார்த்தாள். அந்த மண்டபத்தின் பெரும் பகுதியில் இருள் சூழ்ந்திருந்தது. ஒரு மூலையில் சிறிய அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. திடீரென்று அச்சிறிய விளக்கின் ஒளி மங்கிற்று, அடுத்த கணம் முன் போல் பிரகாசித்தது. ஏதோ ஓர் உருவம் அவ்விளக்கின் முன்புறமாகக் குறுக்கே சென்றது போலிருந்தது. அக்காரணத்தினால் தான் விளக்கு ஒரு கணம் மறைந்து அடுத்த கணம் பிரகாசித்திருக்க வேண்டும். அப்படி விளக்கை ஒரு கணம் மறைத்த உருவம், அதன் முகம், தான் சற்று முன் கண்ணாடியில் கண்ட முகம்தானா? அல்லது இதுவும் தன் சித்தக் கோளாறுதானா?

மணிமேகலை எட்டிப் பார்த்தபடியே கையைத் தட்டினாள், "யார் அங்கே?" என்று மெல்லிய குரலில் கேட்டாள். பதிலுக்கு ஒரு கனைப்புக் குரல் கேட்டது. வௌவால் ஒன்று தான் மேல் கூரையில் தொங்கிய இடத்திலிருந்து கிளம்பி 'ஜிவ்'வென்று பறந்து போய், கூரையில் இன்னொரு இடத்தைப் பற்றிக் கொண்டு தொங்கிற்று. மறுபடியும் மிக மிக இலேசான இருமல் சத்தம்.

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

## ஒரு நீண்ட பயணம்



குதிரையும் ஒட்டகச் சிவிங்கியும் ஒரு இடத்தைவிட்டு இன்னொரு இடத்திற்கு இடம்பெயர திட்டம் போட்டன. ஏனென்றால் தற்போது குதிரையும் ஒட்டகச் சிவிங்கியும் வசிக்கும் இடத்தில் மழை பெய்யாததால் நிலம் வறண்டு விட்டது. எனவே 2 நண்பர்களும் சேர்ந்து நடைபயணம் மேற்கொண்டன. குதிரை ஒட்டகச்சிவிங்கியிடம் நண்பா நாம் எப்படியாவது ஒரு நல்ல புல்வெளியைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அப்புறம்தான் நமக்கு ஓய்வு என்று கூறியது. என்னால் உணவு தேடி அலைய முடியவில்லை என்றது. வெகு தூரம் நடந்த பிறகு குதிரை தூரத்தில் பார்!!! என்றது. அடியில் இருளாகவும் நடுப்பாகத்தில் அடர் ந்த பச்சை நிறத்திலும் மேலே வெளிர் பச்சை நிறத்திலும் வர்ணம் தீட்டியது போல இருந்தது. அருகில் செல்லச் செல்ல இன்னும் அழகாகத் தெரிந்தது.

இரண்டிற்கும் ஒரே சந்தோஷம் தான் துள்ளிக் குதித்தன. அந்தக் காட்டிற்கு இன்னும் அழகு சேர்க்கும் விதமாக நடுவே மலையிலிருந்து இறங்கிய அருவி சலசலவென்று கூழாங்கற்களையும் சில மரக்கட்டைகளையும் அடித்துக் கொண்டு ஓடியது. பார்க்கவே கண்களுக்கு அழகாகவும் குளிர்ச்சியாகவும் தெரிந்தது.

குதிரை ஒட்டகச்சிவிங்கியிடம் நண்பா இனிமேல் சாப்பாட்டிற்கு நமக்கு பிரச்சினையே இல்லை அதே போல் வெயில் காலத்திலும் தண்ணீர் தேடி அலையத் தேவையில்லை. கடவுள் நமக்கு ஒரு நல்ல இடம் காட்டியுள்ளார் என்றது.

அதன் பிறகு ஒரு நிமிடம் கூட வீணடிக்காமல் இருந்த பசியில் இரண்டும் வயிறு முட்ட சாப்பிட்டு முடித்தன. அதன்பின் அருகில் ஓடிய நதியில் தண்ணீர் பருகின. குதிரை ஒட்டகச்சிவிங்கியைப் பார்த்து இப்போதுதான் எனக்கு வயிறு நிறைந்தது என்று கூறியது. பின் குதிரை ஒட்டகச்சிவிங்கியிடம் உறங்கலாமா? என்றது. அதற்கு குதிரை நீ என்ன? மடத்தனமாகப் பேசுகிறாய். இப்பதானே நாம் இந்த காட்டுக்கு வந்திருக்கிறோம் காட்டைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா? வா போய் இந்தக் காட்டைச் சுற்றிப் பாக்கலாம் என்று கூறியது.

அதற்கு ஒட்டகச் சிவிங்கி நீ சொல்றதும் சரி தான் நண்பா வா போகலாம் என்று கூறியது. உடனே இரண்டும் புறப்பட்டன. வழி நெடுகிலும் பல விதமான பழ மரங்களும் காய் மரங்களும் சில பூ மரங்களும் காய்த்தும் பூத்தும் குலுங்கின. இரண்டும் நாம் ஏதோ சொர்க்கத்திற்குத் தான் வந்துவிட்டோமோ என்று நினைத்து கொண்டன.

கொஞ்சத் தூரம் நடந்தபின் புல்வெளியில் ஒரு முயல் தன் மூன்று குட்டிகளுக்கு உணவு ஊட்டி கொண்டிருந்தது. குதிரை முயலிடம் உங்களுக்கு இந்தப் புல் வெளி வசதியாக உள்ளது என்று நினைக்கிறேன் என்றது.

(தொடரும்...)

> சுயமரியாதை மற்றும் முழு மனித குலத்தின் மீதான அன்பே நல்ல நடத்தையை உருவாக்கும்.
> ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உங்கள் தலைகளில் நீங்களே மண்ணை...

ஈழத்தில் இதுகாறும் இடம்பெற்ற தமிழின அழிப்பின் நினைவுத் தூபி கனடாவில் அமைக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் தமிழ் உறவுகளால் நிறுவப்பட்ட நினைவுத் தூபிக்கு கனேடிய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந்நிலையில் இதுகுறித்து தனது கண்டனத்தை வெளியிட்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சு, இலங்கைக்கான கனேடியத் தூதுவரை தனது அமைச்சுக்கு அழைத்து, தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தின் இந்த நடவடிக்கை தமிழ் மக்கள் மத்தியில் மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆம், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்து கடந்த பொதுத் தேர்தலில் அவர் தரப்புக்கு வாக்களித்தனர்.

நினைவேந்துகின்ற உரிமையை எவரும் தடுக்க முடியாது என்று பகிரங்கமாக உரையாற்றியவர் ஜனாதிபதி அநுர.

நிலைமை இதுவாக இருக்கையில், காலாகாலமாக ஈழத் தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாதிகளால் கொல்லப்பட்டமை தெரிந்த விவகாரம்.

அதிலும் முள்ளிவாய்க்காலில் நடந்த தமிழின அழிப்பு என்பது இந்தப் பிரபஞ்சம் இருக்கும்வரை நினைவுக்குரியது.

நிலைமை இதுவாக இருக்கையில், இவற்றையெல்லாம் நன்கு அறிந்திருந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம்; தமிழ் இன அழிப்பின் அடையாளமாக கனடாவில் நிறுவப்பட்ட நினைவுத் தூபி தொடர்பில் தனது கண்டனத்தைத் தெரிவிக்கிறதெனில், அதைவிட்ட கொடுமை வேறுஎதுவாக இருக்க முடியும்.

ஆம், ஜனாதிபதி அநுர மீது தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர்.

இலங்கையை இன, மத பேதமற்ற நாடாக ஆக்குவார் என நினைத்திருந்தனர்.

ஆனால் கனடா நாட்டில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபிக்கு கண்டனம் தெரிவிக்கின்ற அளவிலேயே அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கமும் உள்ளதெனில், சிங்கள ஆட்சியாளர்களின் சிறுமைத்தனம் இன்னமும் நீங்கவில்லை என்பது உறுதிசெய்யப்படுகிறது.

ஆம், ஈழத் தமிழர்கள் இன அழிப்புக்கு ஆளாகிப்போன தங்களின் உறவுகளை நினைவேந்துவதற்கு உள்நாட்டில் அனுமதி வழங்கப்படவில்லை.

அதேநேரம் வெளிநாடுகளிலும் அத்தகைய தூபிகள் அமைப்பதைத் தடுப்பதில் இலங்கை அரசு மேற்கொள்ளும் முயற்சியானது சிங்களப் பேரினவாதிகள் தங்களின் தலைகளில் தாங்களே மண்ணை அள்ளிக் கொட்டுவதற்குச் சமமானதாகும்.

# கனேடிய உயர்ஸ்தானிகரை அழைத்து எதிர்ப்புத் தெரிவித்த விஜித ஹேரத்

## வரவேற்ற நாமல் எம்.பி

(கொழும்பு)

கனடாவின் இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகள் மற்றும் தமிழ் இனப்படுகொலை நினைவுச்சின்னத்தைத் திறப்பதில் கனடா அரசின் நடவடிக்கை குறித்து கனேடிய உயர்ஸ்தானிகரை வெளியுறவு அமைச்சகத்திற்கு அழைத்து தனது ஆட்சேபனையைத் தெரிவித்த இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கையை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வரவேற்றுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் அவர் இந்த விடயம் தொடர்பில் பதிவொன்றை நேற்று வெளியிட்டுள்ளார்.

அதில் பயங்கரவாதத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்க தங்கள் உயிரைத் தியாகம் செய்த நமது மாவீரர்களான இலங்கை இராணுவத்தைப் பாதுகாப்பதற்கும் பயங்கரவாதம் மீண்டும் இங்கு தலைதூக்காமல் இருப்பதை உறுதி செய்வதற்கும் அரசாங்கம் தனது முடிவில் உறுதியாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

தமிழ்ச் சமூகத்தைப் பாதுகாக்கவும் அதன் இளைஞர்களுக்கு ஒரு சிறந்த வாழ்க்கையைக் காணவும் நான் முழு மனதுடன் விரும்புகிறேன் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். அதே வழியில் மற்ற அனைத்துச் சமூகங்களும் நிம்மதியாகச் செழிக்க விரும்புகிறேன்.

இலங்கை இராணுவம் தனது சொந்த மக்களைக் கொன்ற புலிகளைச் சட்டபூர்வமாக அழித்துவிட்டது.

கனடா போன்ற நாடுகள் தங்கள் சொந்த அரசியல் இலாபத்திற்காக பொய்யான இனப்படுகொலைக் கதைகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று அவர் மேலும் கூறியுள்ளார். (ம-4)

### கெஹலியவுக்கு எதிரான வழக்கு

## மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் நியமனம்

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மருந்து கொடுக்கல் - வாங்கல் தொடர்பான வழக்கிற்கு மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் நியமிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் பிரதம நீதியரசரிடம் விடுத்த வேண்டுகோளைப் பரிசீலித்து நீதிபதிகள் குழாம் நியமிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற ஹியூமன் இம்யூனோ குளோபியுலின் தடுப்பூசியைக் கொள்வனவு செய்ததன் மூலம் அரசாங்கத்திற்கு பல கோடி ரூபா நட்டம் ஏற்படுத்தியமை மற்றும் நோயாளர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவித்ததாக முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

### குருநாகலில்

## கிணற்றில் விழுந்த 9 வயதுச் சிறுவன் பலி

குருநாகல் - பொல்கஹவலப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெனகமுவப் பிரதேசத்தில் உள்ள பௌத்த துறவிகள் மடத்தில் தங்கியிருந்த 9 வயதுச் சிறுவன் ஒருவன் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளதாகப் பொல்கஹவலப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை (13) காலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம், பதவிய பிரதேசத்தைச் சேர்ந்த 9 வயதுடைய சிறுவனே உயிரிழந்துள்ளான்.

சம்பவத்தன்று மடத்தில் தங்கியிருந்த தேரர் ஒருவர் கிணற்றில் சிறுவன் விழுந்திருப்பதைக் கண்டு சிறுவனை மீட்டு உடனடியாகக் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாகப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-4,7)

## யாழ்ப்பாணம் செம்மணியில் இன்று அகழ்வுப் பணி

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் மனிதச் சிதைவுகள் மீட்கப்பட்ட பகுதிகளில் அகழ்வுப் பணிகள் இன்று இடம்பெறவுள்ளன. கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் செம்மணிப் பகுதியிலுள்ள இந்து மயானத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காகக் குழிகள் வெட்டப்பட்டபோது அதற்குள் இருந்து மனித என்புச் சிதைவுகள் மீட்கப்பட்டன.

இது தொடர்பில் பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய விடயத்தை பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றதைத் தொடர்ந்து பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி சம்பவ இடத்தில் நீதவான் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார்.

இதன்போது மனிதச் சிதைவுகள் மீட்கப்பட்ட பகுதியை ஸ்கான் ஆய்வுக்கு உட்படுத்தவும் தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாகவே அங்கு அகழ்வாய்வு இடம்பெறவுள்ளது. துறைசார் வல்லுநர் பேராசிரியர் சோமதேவ தலைமையில் இந்த ஆய்வுப்பணிகள் இடம்பெறவுள்ளன. (ம-4)

## ஜனாதிபதி அலுவலகத்தின் வாகனங்கள் இன்று ஏலம்

ஜனாதிபதி அலுவலக அதிசொகுசு வாகன ஏலத்தின் இரண்டாவது கட்டமாக சொகுசு வாகனங்கள் மற்றும் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட 26 வாகனங்கள் இன்று ஏலமிடப்படவுள்ளன.

விற்பனை செய்யப்படவிருக்கும் அனைத்து வாகனங்களும் பத்து வருடங்களுக்குள் உற்பத்தி செய்யப்பட்டவை.

இன்றைய தினம், பீ.எம்.டபிள்யூ.மோட்டார் வாகனம் 01, போர்ட் எவரெஸ்ட் ஜீப் 01, ஹூண்டாயி டெரகன் ஜீப் 01, லேண்ட் ரோவர் ஜீப் 01, மிட்சுபிஷி மொண்டெரோ ஜீப் 01, நிசான் பெற்றல் ஜீப் 03, நிசான் வகை மோட்டார் கார்கள் 02, போர்ஷ் (Porsche) கெயின் மோட்டார் வாகனம் 01, சென்யோன் ரெக்ஸ்டன் வகை ஜீப் 05, லேண்ட் குரூஷர் சஹரா வகை ஜீப் 01, வீ 08 வாகனங்கள் 06 மற்றும் மிட்சுபிஷி ரோசா வகை குளிரூட்டப்பட்ட பஸ் ஒன்றும் ஏலமிடப்படவுள்ளன.

ஜனாதிபதி அலுவலகத்தின் அதி சொகுசு வாகன ஏலத்தின் முதல் கட்டத்தின் கீழ் இதற்கு முன்னதாக 14 சொகுசு வாகனங்கள், பாவனையிலிருந்து நீக்கப்பட்ட 06 வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்களை விற்பனை செய்வதற்கு அமைவான ஏலம் நடத்தப்பட்டது.

அரசாங்கத்தின் செலவுக் குறைப்பு மற்றும் நிதிப் பொறுப்புக்கூறலைப் பலப்படுத்தும் நோக்கில் இந்த வாகனங்களை விற்பனை செய்யத் தீர்மானித்திருப்பதோடு முன்னைய ஏலத்தில் 09 டிபெண்டர்கள் உள்ளடங்கலாக பல்வேறு வகையான 15 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்த வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்தின் நிரந்தரப் பணிக் குழுவினருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு முன்னாள் ஜனாதிபதியால் தனது பதவிக்காலத்தில் அரசியலமைப்பின் 41 (1) உறுப்புரைக்கு அமைவாக பணியமர்த்தப்பட்ட ஆலோசகர்கள் மற்றும் பணிக் குழாமிற்காக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 11.05.2025 முதல் 26.05.2026 வரை

60/100

## வருவது விரய குருவாகும்! வரவுகள் அனைத்தும் செலவாகும்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**கடக இராசி நேயர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 11ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான், 11.5.2025 அன்று 12 ஆம் இடமான விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே வருமானத்தைக் காட்டிலும் செலவு கூடுதலாக இருக்கும். வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில்தான் பூர்த்தியாகும். சுய ஜாதக அடிப்படையில் குருபலம் பார்த்து அதற்குரிய வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

### குரு இருக்கும் இடத்தின் பலன்

குருபகவான், உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அவர் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பாராத விதத்தில் இடமாற்றம், இலாகா மாற்றங்கள் ஏற்படலாம். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. அதிக விரயத்தின் காரணமாக மன அமைதி கெடும்.

### குருவின் பார்வை பலன்

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவானுடைய பார்வை உங்கள் இராசிக்கு 4, 6, 8 ஆகிய இடங்களில் பதி கிறது. எனவே அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. குருவின் பார்வை 4ஆம் இடத்தில் பதிவதால் உறவினர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். தாய்வழி ஆதரவு உண்டு. பழைய வாகனங்கள் பழுதாவதை முன்னிட்டு புதிய வாகனங்கள் வாங்க முன் வருவீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும் குருவின் பார்வை 6ஆம் இடத்தில் பதிவதால் ஆரோக்கியத் தொல்லை அகலும். ரண சிகிச்சை செய்யாமல் சாதாரண சிகிச்சையிலேயே நோய்கள் குணமாகும். பிறர் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை அமையும். சமுதாயத்தில் உயர்ந்த இடத்தைப் பிடிக்க முயல்வீர்கள் பாகப்பிரிவினைகள் சாதகமாக அமையும்

குருவின் பார்வை 8ஆம் இடத்தில் பதிவதால் பயணங்கள் பலன் தருவதாக அமையும். பல நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த அயல்நாட்டு யோகம் இப்பொழுது வந்து சேரும். போட்டிக்கடை வைத்தோர் விலகுவர். பொதுவாழ்வில் ஏற்பட்ட வீண்பழிகள் அகலும். இழந்த பதவியை மீண்டும் பெறுவீர்கள். எதிர்காலத்தைப் பற்றிய மனப் பயம் அகலும்

### நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்

11.5.2025 முதல் 9.6.2025 வரை மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். பிள்ளைகளின் கல்யாண முயற்சி கைகூடும். தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் திருப்தி தரும்.

திருவாதிரை நட்சத்திரக் காலில் ராகு சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது 10.6.2025 முதல் 7.8.2025 வரை மிக கவனமாகச் செயற்பட வேண்டும். கடன்சுமை அதிகரிக்கும். கவலைகள் கூடும். வரவு ஒருமடங்கு வந்தால் செலவு இருமடங்காகும். ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. சொத்துக்களால் வில்லங்கங்கள் வரலாம். இக் காலத்தில் எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. தடைகள் அகல வழிபாடுகள் தேவை.

புனர்பூசம் நட்சத்திரக் காலில்




தன் சுய சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது 8.8.2025 முதல் 25.5.2026 வரை அற்புதமான பலன்கள் உங்களுக்கு வந்துசேரும். விபரீத ராஜயோக அடிப்படையில் திட்டமிடாமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திடீர் தன வரவு உண்டு உயர்ந்த மனிதர்களின் சந்திப்பால் நினைத்ததை உடனடியாகச் செய்து முடிப் பீர்கள். அசையாச் சொத்துக்கள் வாங் கும் யோகம் உண்டு. புதிய வாகனங்கள் வாங்கிப் பயணிக்கும் எண்ணம் நிறைவேறும், நீண்ட நாட்களாக இல்லத்தில் நடைபெறாதிருந்த காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும்.

### குருவின் அதிசாரப் பெயர்ச்சி

8.10.2025 அன்று குருபகவான் கடக இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். அப்பொழுது அவரது பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிகிறது. கடகத்தில் குரு உச்சம் பெறுவதால் அவரது பார்வைக்குப் பலன் அதிகம் கிடைக்கும். குறிப்பாக ஆரோக்கியச் சீர்கேடுகள் அகலும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாக செய்து முடிக்கும் ஆற்றல் பிறக்கும். வருமானப் பற்றாக்குறை அகலும். உச்ச குருவின் பாரவை பலனால் உயர் அதிகாரிகளின் பழக்கம் கிடைக்கும்.

சப்தம ஸ்தானத்தை குரு பார்ப்பதால் கல்யாண முயற்சிகள் கைகூடும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். அவர்களின். மேற்படிப்பு சம்பந்தமாகவோ, அயல்நாடு சென்று பணிபுரிவது சம்பந்தமாகவோ, நீங்கள் செய்த ஏற்பாடு இப்பொழுது பலன்தரும். பெற்றோர்களின் ஆதரவு திருப்தி தரும். இதுபோன்ற நேரங்களில் வியாழன் தோறும் விரதம் இருந்து குரு கவசம் பாடி குரு பகவானை வழிபடுவது மேலும் நன்மையை வழங்கும்.

### சனிப்பெயர்ச்சி

6.3.2026 அன்று சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு வாக்கிய கணித ரீதியாக பெயர்ச்சியாகிச் செல்கிறார். இப்பொழுது அஷ்டமத்துச் சனி முழுமையாக விலகிவிட்டது. எனவே அதிஷ்ட காற்று உங்கள் பக்கம் வீசப்போகின்றது. ஒளிமயமான எதிர்காலத்திற்கு இனி உத்தரவாதம் கிடைக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி உண்டு சனிக்கிழமை சனிபகவானையும், அனுமனையும் வழிபட்டால் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக புதியமுயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் அமைதி கிடைக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. பெற்றோர்களின் உடல்நலத்தில் கவனம் தேவை. உடன் பிறப்புக்கள் உறுதுணையாக இருப்பர்.

(தொடரும்)

## செம்மணியில்...

துள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளனர். இந்நிலையில் அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துச் சம்பவம் குறித்து விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4)

## உரும்பிராயில்...

மண்ணெண்ணெய் அருந்தியுள்ளார்.

உறவினர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-4,60)

### மஹஜன சம்பத

திகதி 2025.05.14
சீட்டிழுப்பு இலக்கம் 5829
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்: Y 2 3 4 0 6 7

### அத சம்பத

ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்: Y 4 0 6 7
சீட்டிழுப்பு இலக்கம் 404
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

### தன நிதானய

திகதி - 2025.05.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1859
E 33 40 49 79 E
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள் / விசேட ஆங்கில எழுத்து
Double Chance இலக்கம் 18540
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

### மெகா பவர்

திகதி 14/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2177
வெற்றி எழுத்து Z, சுப்பர் இலக்க 07, வெற்றி இலக்கங்கள் 20 41 61 78
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

### NLB ஜய JAYA

திகதி 2025.05.14
சீட்டிழுப்பு இலக்கம் 097
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்: K 1 0 6 0
தேசிய லொத்தர் சபை, கொழும்பு 01
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 4071
சீட்டிழுப்பு திகதி 14.05.2025
ஆங்கில எழுத்து E, வெற்றி இலக்கங்கள் 03 15 18 75
விசேட வெற்றி எழுத்து E
தேசிய லொத்தர் சபை

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.14
சீட்டிழுப்பு இலக்கம் 1138
வெற்றி இலக்கினம் கடகம், வெற்றி இலக்கங்கள் 32 39 47 60, விசேட இலக்கினம் கடகம்
தன யோக இலக்கம் 43982, தேசிய லொத்தர் சபை, நாளுக்கான விதி எண் 36

## நுவரெலியாவில்...

வான் ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் 19 பேர் காயமடைந்ததாகக் கொத்மலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்களை கொத்மலை பிராந்திய மருத்துவமனையில் அனுமதித்த பின்னர், பலத்த காயமடைந்த பலரை மேலதிக சிகிச்சைக்காக கம்பளை போதனா வைத்தியசாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியாவிலிருந்து அநுராதபுரம் இராஜாங்கனை நோக்கிச் சென்று கொண்டிருந்த வான் ஒன்றே இவ்வாறு வீதியை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. மேலும் இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொத்மலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கொத்மலை பஸ் விபத்து இடம்பெற்ற பகுதிக்கு அருகிலேயே இவ்விபத்து இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## இனப் படுகொலை...

"ஆதாரமற்ற இனப்படுகொலை குற்றச்சாட்டுகள்" என்று கூறி அதற்கு அரசாங்கத்தின் கடுமையான எதிர்ப்பை ஹேரத் தெரிவித்தார். மேலும் நினைவுச்சின்னத்தின் நிர்மாணத்தையும் விமர்சித்தார்.

இத்தகைய நடவடிக்கைகள் இலங்கையின் தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் அதன் பல்வேறு சமூகங்களிடையே நீடித்த அமைதியை நோக்கிய முயற்சிகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று அவர் எச்சரித்தார்.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில் நடந்த இறுதிக் கட்ட யுத்தத்தின்போது, இனப்படுகொலை நடந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டானது, தேசிய அல்லது சர்வதேச அளவில் எந்தவொரு நம்பகமான அதிகாரியாலும் ஆதாரத்துடன் நிரூபிக்கப்படாததுடன், அவை தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்ட குற்றச்சாட்டுக்கள் என அரசாங்கம் தொடர்ந்தும் வலியுறுத்துகிறது.

இந்தப் பொய்யான கதையை இலங்கை முற்றிலும் நிராகரிப்பதுடன், கனடாவிற்குள் தத்தமது தேர்தல் ஆதாயங்களுக்காக இவ்வாறு பிரசாரம் செய்யப்பட்டுள்ளதாக நம்புகிறது.

2021ஆம் ஆண்டு ஏப்ரலில், கனடாவின் வெளிநாட்டு அலுவல்கள், வர்த்தகம் மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் இலங்கையில் இனப்படுகொலை நடந்ததாக எந்தவொரு கண்டுபிடிப்பையும் கனடா அரசு மேற்கொள்ளவில்லை என்பதை அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

மேலதிகமாக 2006ஆம் ஆண்டில் கனடாவானது தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பொன்றாக அறிவித்ததுடன், 2024ஆம் ஆண்டு ஜூனில் இவ்வகைப் படுத்தலை மீண்டும் உறுதிப்படுத்தியதாக அரசாங்கம் வலியுறுத்தியது.

பிரம்டன் நகர சபையின் இவ் வருந்தத்தக்க முயற்சியைத் தலையிட்டுத் தடுக்குமாறு, கனடாவின் மத்திய அரசை இலங்கை அரசு வலியுறுத்தியுள்ளது.

இச்செயற்பாடு குறித்த முன்னெடுப்புக்களை, பரந்தளவிலான இலங்கை மற்றும் கனேடிய சமூகங்களுக்கு எதிரானதான ஒன்றாகவே இலங்கை அரசு கருதுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைப் பரப்புவதும், கட்டுக்கதைகளை அடிப்படையாகக் கொண்ட நினைவுச்சின்னங்களை நிர்மாணிப்பதும் பொதுமக்களைத் தவறாக வழிநடத்துவது மட்டுமல்லாமல், அனைத்து சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை மற்றும் நீடித்த அமைதிக்கான இலங்கையின் அயராத முயற்சிகளைச் சீர்குலைப்பவையாக அமையுமென இலங்கை அரசாங்கம் உறுதியாக நம்புகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## மக்...

எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் அளித்த ஆணையை திருட முயற்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு வழங்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் 60வது ஆண்டு விழாவில் உரையாற்றும்போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் தேசிய மக்கள்சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் செயற்படுகிறது. மக்கள் விருப்பத்திற்கு மாறாக செயற்படும் எந்தவொரு முயற்சியும் கடுமையான விளைவுகளை சந்திக்கும் என ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி 267 உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிக்கும் ஆணையைப் பெற்றுள்ளது. முதல் நாளில் 152 மன்றங்களிலும், மீதமுள்ள 115 மன்றங்களிலும் விரைவில் அதிகாரத்தை ஏற்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

உள்ளூராட்சி சபைகளில் எதிர்க்கட்சிக்கு ஆட்சி செய்யும் ஆணை இல்லை எனவும், சில கட்சிகள் ஒரு மன்றத்தில் ஒன்று அல்லது இரண்டு உறுப்பினர்களை மட்டுமே பெற்றுள்ளன எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மக்கள் ஆணைக்கு எதிராக உருவாக்கப்படும் எந்தவொரு உள்ளூராட்சி மன்றமும் மூன்று முதல் நான்கு மாதங்களுக்கு மேல் நீடிக்காது எனவும் ஜனாதிபதி எச்சரித்துள்ளார். (ம-4)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


### உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பிரி தன சம்பத

14.05.2025, வெற்றி வாரம் 537, வர்ணம்
ஆங்கில எழுத்து K, மற்றும் வெற்றி இலக்கம் 2 5 6 3 8 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.37,176,366.00
விசேட இல. 66758
அபிவிருத்தி லொத்தர் சபை (DLB)
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2803, வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 2025.05.14, தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 12 56 72, ஆங்கில எழுத்து M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,699,279.20
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா Shanida

திகதி 14.05.2025, வெற்றி வாரம் 4964, வர்ணம்
வெற்றி இலக்கங்கள் 10 32 40 54, ஆங்கில எழுத்து L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,550,810.80
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 83515
அபிவிருத்தி லொத்தர் சபை, www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ஜயோதா Jayoda

திகதி 2025.05.14, வெற்றி வாரம் 2126, வர்ணம்
வெற்றி இலக்கங்கள் 22 24 41 67, ஆங்கில எழுத்து Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,326,375.20
அபிவிருத்தி லொத்தர் சபை, www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4515, வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 14.05.2025, தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 13 45 51 59, கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
விசேட இலக்கத்திற்கு ரூ.50,000/- பணப்பரிசு 274336
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 07 02 03 19 26 (சுப்பர் இலக்கம் 07)
சீட்டிழுப்பு வாரம் 1979, வர்ணம், திகதி 14.05.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.574,793,746.80
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அத கோடிபதி ADA KOTIPATHI

புதன்கிழமை
வெற்றி வாரம் : 2629
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி : 2025.05.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,155,099.20
வெற்றி இலக்கங்கள் 51 53 65 71, ஆங்கில எழுத்து F
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 316289
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## ஒழிக்க...

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மக்கள் மிகுந்த அச்சத்திலும் சந்தேகத்திற்கு மத்தியிலும் இன்று வாழ்ந்து வருகின்றனர். இதற்குக் காரணம் நாட்டின் கொலைகாரக் கும்பல்கள், பாதாள உலகக் கும்பல்கள், குண்டர்கள், T-56 தோட்டாக்கள், பயோனெட்டுகள் சமூகத்தை ஆட்கொண்டுள்ளன.

நாட்டின் சட்டம் அமுலில் இல்லை. முற்றத்திலும் வீட்டிலும் வேலை செய்யும் இடங்களிலும் தெருக்களிலும் நீதிமன்றத்திலும் கூட கொலைகள் நடக்கின்றன. சமீபத்திய மாதங்களில் அதிக எண்ணிக்கையிலான கொலைச் சம்பவங்கள் நடந்துள்ளன. கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது இது ஒரு சாதாரண நிலைமை என அரசாங்கம் கூறுகிறது.

முறைமையில் மாற்றத்தைக் கொண்டு வந்து 2 மாதங்களில் பாதாள உலகத்தை அழிப்பதாக அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால் நாட்டில் தினமும் கொலைகள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. தமது இயலாமையை நியாயப்படுத்தாது மக்களை வாழ வைப்பதே ஆட்சியாளரின் பொறுப்பாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ம-4)

## 22 குழந்தைகள்...

காஸாவின் சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் இதில் சுமார் 22 குழந்தைகள் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதல்கள் அனைத்தும் அமெரிக்க - இஸ்ரேலிய பிணைக் கைதியான இளைஞர் ஒருவரை ஹமாஸ் படையினர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் திருப்பி அனுப்பியதன் மறுநாளே நடைபெற்றுள்ளன.

இந்தத் தொடர் தாக்குதல்களினால் கான்யூனுஸ் பகுதியில் மட்டும் 10 பேர் கொல்லப்பட்டனர். ஜபாலியா பகுதியில் இஸ்ரேலின் தாக்குதலில் இடிந்த வீடுகளின் இடிபாடுகளுக்குள் சிக்கி பலியான குழந்தைகளின் உடல்களை மீட்புப் படையினர் மீட்டு வருகின்றனர்.

இருப்பினும், குடியிருப்புப் பகுதிகள் மீதான தாக்குதல்கள் குறித்து கருத்து தெரிவிக்க இஸ்ரேல் ராணுவம் மறுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ம-4)

## தமிழர்...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் மூன்றாம் நாளான நேற்று (14) யாழ்.வல்வெட்டித்துறையில் நினைவேந்தல் நிகழ்வும் கஞ்சி பரிமாறலும் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட முச்சக்கர வண்டி சங்கத்தினரின் ஏற்பாட்டில் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று(14) காலை முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கப்பட்டது.

அம்பாறை - காரைதீவு சந்தைக் கட்டடத் தொகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது இறுதிக்கட்ட யுத்தத்தில் உயிர்நீத்தவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவுக்கஞ்சியும் பரிமாறப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களால் நாச்சிமார் கோயில் சந்தியிலும் சாவகச்சேரி பஸ் நிலையத்திலும் வல்வெட்டித்துறை கம்பர்மலை சந்தியிலுள்ள நினைவாலயம் முன்பாகவும் வேலணை வங்களாவடியிலும் மன்னார் மாந்தை கிழக்கு செல்வபுரத்திலும் மூதூர் கட்டைப்பறிச்சான் பகுதியிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (ம-4)

## நினைவாயுதம்...



லாறாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பிரதான வளாகத்தில் (கைலாசபதி அரங்கு அருகே) நேற்று 14.05.2025 புதன்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

18.05.2025 ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ள இந்தக் கண்காட்சியில் மாணவர்கள், பொதுமக்கள், ஆர்வலர்கள் அனைவரும் பங்கேற்று இனப்படுகொலை வரலாற்றை அடுத்த சந்ததிக்கு கடத்த வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரான தயாபரன் லஜிதர், எமது மக்கள் பட்ட வலிகளையும் துன்பங்களையும் அடுத்த சந்ததிக்கு கடத்த வேண்டும் என்கிற நோக்கில் மிகப்பெரிய பொறுப்பொன்றை யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகமாக நாங்கள் கையில் எடுத்திருக்கின்றோம். முக்கியமாக பாடசாலை மாணவர்களிடத்தில் எங்கள் துயரம் தோய்ந்த வரலாறு கடத்தப்படுவது அவசியமானது என்றார். (ம-4,33)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2966)

076 825 7716 (ஆகாஸ்)



**அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்**




தோற்றம் 1951.07.22

மறைவு 2025.04.16

கடந்த 16.04.2025 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் செல்லையா பத்மநாதன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 16.05.2025 வெள்ளிக்கிழமை காலை 04.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ள சபிண்டீகரணக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உறவினர்கள், நண்பர்கள், கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட சமூகத்தினருக்கும் இறுதிக் கிரியையின் போது கலந்து அஞ்சலி செலுத்திய அன்பர்களுக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும். (C-2967)

சத்திரந்தை, அல்வாய் வடக்கு, அல்வாய்.

இங்ஙனம் : குடும்பத்தினர்


**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2965)



**கனடா - வரி இல்லாமல்**

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் Metro Branch, சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C-2964)



**மணமகன் தேவை**

1987 அவுஸ்திரேலியா, 1995 லண்டன் இல் வசிக்கும் பெண்களுக்கு உள்ளூர், வெளியூர் மணமகன்கள் தேவை.

077 041 3462 (1131)



**பணியாளர் தேவை**

விடத்தல்பளை, கச்சாய் வீதியில் அமைந்துள்ள இராஜேஸ்வரி அக்ரோ நிறுவனத்தில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பண்ணையில் வேலை செய்த அனுபவமுள்ள பணியாளர் தேவை.

077 076 7114 (C-2969)



**காரியாலய நிர்வாக உத்தியோகத்தர் தேவை**

அரசசார்பற்ற நிறுவனத்தில் IT இல் போதிய அறிவும் ஆங்கில அறிவும் உள்ள நிர்வாக உத்தியோகத்தர் தேவை. மேலதிக தகைமைகள் கவனிக்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி 20.05.2025

LIONS INTERNATIONAL
district306d12@gmail.com
E.MAIL மூலம் தொடர்பு கொள்ளவும். (4187)



**பதவி வெற்றிடம்**

- கணனி பக்க வடிவமைப்பாளர் (ஆண்கள் – இரவுக் கடமை)
- பாதுகாப்பு உத்தியோகத்தர் (இருபாலாரும்)

தொடர்பு : 076 097 3121

பொது முகாமையாளர்
வலம்புரி நாளிதழ்


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.